# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## THIRD YEAR EXAMINATIONS IN BACHELOR OF ARTS (EXTERNAL)
## 2009 / 2010 HELD IN DECEMBER - 2010

## STS 3.12 – NON PARAMETRIC AND CATEGORICAL DATA ANALYSIS

எவையேனும் ஐந்து (05) வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. அ) பரமானம் சாரா புள்ளிவிபரவியல் என்றால் என்ன? தெளிவாக விளக்குக.

ஆ) பரமானம் சாரா புள்ளிவிபரவியலின் அனுகூலம் , பிரதிகூலம் என்பனவற்றை அட்டவணைப்படுத்துக.

இ) ஒரு நிறுவனத்தின் விற்பனை முகவர் 12 கடைகளில் பெற்ற கேள்வியானது பின்வருமாறு 15, 16, 14, 18, 12, 14, 19, 11, 10, 13, 18, 16. 5% பொருண்மை மட்டத்தில் விற்பனை முகவரினால் கடைகளில் பெற்ற கேள்வியானது 17ஐ விட குறைவானதாகக் காணப்படுமா? ஆராய்க.

02. அ) பரமானம்சாரா புள்ளிவிபரவியல் சோதனையில் "Run Test" யின் பிரயோகத்தினை சுருக்கமாக விளக்குக.

ஆ) பெரிய மாதிரிக்கு "Run Test" பிரயோகிக்கப்படும் முறையினை தெளிவாக விளக்குக.

இ) ஒரு நிறுவன முகாமையாளர் தனது நிறுவனத்துக்கு கிடைக்கும் கேள்விகளை ஏற்பது (A) அல்லது நிராகரிப்பது (R) ஆனது எழுமாற்றுத்தன்மை உடையதாக காணப்படுகின்றதா? என்பதனை ஆராய முயல்கிறார். நிறுவனத்துக்கு கிடைத்த 45 கோள்விகள் பின்வருமாறு காணப்பட்டது. 5% பொருண்மை மட்டத்தில் நிறுவனத்துக்குக் கிடைக்கப் பெற்ற கேள்விகள் ஏற்பது (A) அல்லது நிராகரிப்பது (R) ஆனது எழுமாறாக உள்ளதா? ஆராய்க.

A A A R R A A R R R A A A A A A A R R R A A R R R A A A A R R R R R

R A A R R R A A A R R

03. அ) 'Main Whitney U – Test யினை சுருக்கமாக விளக்குக.

ஆ) ஒரு கணனி நிறுவனம் தனது இரு கிளைகளை இரண்டு நகரங்களில் நிறுவி உள்ளது. இவ்விரு கிளைகளில் 15 நாட்களில் விற்பனை செய்யப்பட்ட கணனிகளின் எண்ணிக்கை கீழ் உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. 5% பொருண்மை மட்டத்தில் கிளை – 1 ஆனது கிளை – 2 ஐ விட விற்பனையில் சிறந்ததாகக் காணப்படுகின்றதா? ஆராய்க.